**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 101** **நாள்: 16.05.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் 11ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 81 சதவீத மாணவ, மாணவியர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.**

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின்கீழ் 206 தொடக்கப்பள்ளிகள், 130 நடுநிலைப் பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம் 417 பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

2024-25ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற 11ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 2,366 மாணவர்கள், 2.995 மாணவியர் என மொத்தம் 5,361 மாணவ, மாணவியர் தேர்வு எழுதினார்கள். இதில் 1,783 மாணவர்கள் (75.36%), 2,557 மாணவியர் (85.38) என மொத்தம் 4,340 மாணவ, மாணவியர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். மொத்த தேர்ச்சி சதவீதம் 81% ஆகும். இது சென்ற ஆண்டைக் காட்டிலும் 1 சதவீதம் அதிகமாகும்.

**பாடவாரியாக 100 மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள்**: கணினி அறிவியல் பாடப்பிரிவில் 1, கணினிப் பயன்பாடுகள் பாடப்பிரிவில் 1, வணிகவியல் பாடப்பிரிவில் 4 என 6 மாணவ, மாணவியர்கள் 100/100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

**தேர்ச்சி சதவீத அடிப்படையில் முதல் ஐந்து இடங்களில் உள்ள பள்ளிகள்** : லாய்ட்ஸ் சாலை-சென்னை மேல்நிலைப்பள்ளி 100 % தேர்ச்சி பெற்றுள்ளது.

**மதிப்பெண்கள் அடிப்படையில்** 9 மாணவ, மாணவியர்கள் 551க்கு மேல் 600 வரை மதிப்பெண்களும், 68 மாணவ. மாணவியர்கள் 501லிருந்து 550 வரை மதிப்பெண்களும், 249 மாணவ, மாணவியர்கள் 451லிருந்து 500 வரை மதிப்பெண்களும் பெற்றுள்ளனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**